
www.padippakam.com



THOONDIL
Südasien Büro
Große H... str. 58
4600 Dortmund 1

# வெகுஜனம்

ஜனம்-1 யூன் 1988 குரல்-3

படிப்பகம

www.padippakam.com

www.padippakam.com

THOONDIL
Südasien Büro
...e Heimstr. 58
Dortmund 1

# எமது எண்ணங்கள்

**வணக்கம்!**

நடந்து முடிந்த நான்கு மாகாண சபைத்தே-ர்தல்களும் நீண்ட காலத்திற்கு பின்பு மக்களின் மனோநிலையை வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பத்தை கொடுத்ததை மக்கள் பெரிதும் விரும்பியுள்ளார்கள் என்பதை தெளிவாக்கிறது.

மக்களின் மனோநிலை என்ன?

மாகாண சபைத் திட்டம் இனப்பிரச்சனைக்கு தீர்வாகும் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார். சிறுபான்மை இனத்தவரின் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும். சிறுபான்மை இனத்தவரும் நாடும் ஐக்கியமாக வாழ வேண்டும் என ஐக்கிய சோசலிச முன்னணியினர் பகிரங்கமாக பிரச்சாரக்கூட்டங்களில் பேசியுள்ளனர். குறிப்பாக ஐ-க்கிய சோசலிச முன்னணியின் தலைவர் சந்திரிகா விஜய குமாரணதுங்கா பல கூட்டங்களில் பேசும் போ-து இதனை வற்புறுத்தியுள்ளார்.

மாகாண சபை தேர்தலில் வாக்களித்த பொது மக்களில் 41% மான மக்கள் ஐக்கிய சோசலிச முன்னணிக்கு வாக்களித்துள்ளனர். இவர்களில் பெரும்பான்மையினர் சிங்கள மக்கள் ஆவர். இவர்கள் ஐக்கிய சோசலிச முன்னணி முன் வைத்துள்ள இலங்கை மக்களின் ஐக்கியத்தையும் சிறுபான்மையினரின் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும் எனவும் ஏற்றுக் கொண்டுள்ளனர். பெரும்பான்மை மக்களிடமிருந்து இனவாதம் சிறிது சிறிதாக புதை குழிக்குள் இறங்கிக் கொண்டிருப்பதையே இத்தேர்தல் நிரூபித்திருக்கிறது.

ஆனால் வடக்கு கிழக்கில் நடப்பது என்ன?

இப்போதும் சிங்கள அப்பாவி பொது மக்கள் படுகொலை செய்யப் படுகிறார்கள். ஸ்ரீலங்கா அரசும் சிங்கள ம-க்களும் நம்மீது இனவெறியை கட்டவிழ்த்துவிட்-

டார்கள் என ஓலமிட்டோம் ஆனால் அங்கே தெளிவு ஏற்பட்டுள்ளது. நம்மிடையே இனவாதம் வளர்க்கப்படுகிற நாகரீக மற்ற தன்மைக்கு நாம் வெட்கி தலை குனிய வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாண சபை தேர்தல் நடைபெறும் போது நாம் இனவெறித் தலைமைகளை நிராகரித்து ஐக்கியத்தை வலியுறுத்துபவர்களை நமக்கு தலைமை தாங்க வைக்க வேண்டும்.

---

# உரிமை

தேனீர் சிவப்பினிலே—எங்கள்
செங்குருதி நிறம் காணும்!
இலங்கை வளங் கொழிப்பில்
இன்தமிழர் உயிர் காணும்!
மண்ணின் மணம் இன்றும்—தமிழ்
மனிதர் உடல் வாடையன்றோ!
இருள் நீக்கிய ஒளிக்கூட்டம்
இலங்கையை விட்டு ஓடுகின்றார்!
உழைத்து உருதருவோன்
உலகின் மைந்தனாகும்
எந்த இன மானாலும்
உழைப்பாளி ஓரினமே
உரிமைக்குப் போராடும்
வாழ்வுக்குப் போராடும்
இலங்கைத் தமிழனும்
சிங்களத் தோழனும்
ஒருமுகமாய்ப் போரிடுவோம்
உரிமைதனை வென்றிடுவோம்!

—வெள்ளையம்மா குன்னூர்

நன்றி:- குமுதம் [illegible]

# இன்றும் சிந்திக்காவிட்டால் நாளை ------

எமது தேசத்து மக்கள் தடையற்ற சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கும் சுதந்திரம் மறுக்கப்பட்டவர்களாயும், அமைதி வாழ்வை இழந்தவர்களாயும், நித்தம் நித்தம் யுத்தத்தால் செத்தும், மரண பயத்திலும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களின் நல்வாழ்விற்கோ அன்றி விடிவுக்கோ, அமைதிக்கோ இன்னும் நம்பிக்கை ஒளி கிட்டவில்லை. பதிலுக்கு இம் மக்கள் தனி மனித விருப்பு வெறுப்புகளுக்கு எந்த நாளும் பலியாகி அன்றி மடியவேயும் அநாதைகளாகியது தான் மிச்சம். இலங்கை இராணுவத்தினின் கொடுமைகளிலும் விடுதலைப் போர் நடத்தி வந்த விடுதலை இயக்கங்களின் வேண்டாத செயல்களிலும் மரணித்தவர்கள் எத்தனை பேர். இவற்றிற்கு மேலாக இந்திய அமைதிப் படையினால் அவஸ்தையைத் தழுவியவர்கள் எத்தனை பேர். மொத்தத்தில் எங்கள் மக்கள் செத்து, மடிந்தார்கள். இவைகளுக்கு யார் பொறுப்பு? இந்த மக்களின் கொலைகள், மரணங்கள் தேவையானதா? இவைகள் நியாயப் படுத்தப் படக் கூடியனவா? இவைகளால் எம் மக்கள் அடைந்த பயன் என்ன? ஏன் இவைகளை நீங்கள் சிந்திக்க மறுக்கின்றீர்கள்.

தேச விடுதலையில் ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாதது. அதுவும் ஒர் அங்கம். ஆனால் ஆயுதமே போராட்டத்தின் முழுத்தன்மையும் ஆகிவிட முடியாது. போராளிகள் ஆயுதமேந்தியது மக்களை

க்கு வெற்றி கிடைப்பதற்கே அன்றி மக்கள் நீதி கேட்க கொள்வதற்கல்ல. தீய சக்திகளின் துணையால் பிழையான பாதையில் முன்னெடுக்கப் பட்ட போராட்டம் எத்தனையோ அழிவுகளுக்கும் அனர்த்தங்களுக்கும் பின் அடங்கண்டது. இது ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டுமென்பதை மனிதாபிமான முறையில் மக்களின் நலன் கருதி எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். நடந்தவைகள் மறந்து சீர்தூக்கிப் பின் நடப்பவைகள் அமைதிக்கு வழிகாணும் என்ற நிலையில் பொது மக்கள் இரவு ஆறுதல் அடைந்தனர். ஆனால் அதை ஏன் அந்த மக்களுக்கு இந்தப் போராட்டச் சக்திகள் கொடுக்க முன்வரவில்லை. போராளிகள் யார்? பொது மக்கள் யார்? யார் யாரைக் கொல்வது? யாருக்கு முன்னுரிமை? யாருக்காக இந்த ஒப்பந்தம். இப்படி உங்களால் கேட்க முடியவில்லை. ஏன்?

போராடும் சக்திகள் யாருக்கு முன்னுரிமை கொடுக்கின்றார்கள். போராட்டத்திற்கா, பொது மக்களுக்கா, போராளிகளுக்கா அல்லது போராடும் இயக்கங்களுக்கா? போராட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டதால் போரை முடிவுக்குக் கொண்டு வர நீர் ஒப்பந்தம் வந்தது. போர் முடிந்த பின் யாருக்கு முன்னுரிமை? போராளிகளுக்கா? அல்லது மக்களுக்கா? இது தான் இன்றைய கேள்வி. மக்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டால் அமைதி வாழ்வு இப்போது உறுதி செய்யப்பட வேண்டும். ஆயுதங்கள் அமைதி வாழ்வை உறுதி செய்ய துணை போக வேண்டும். அன்பு, கருணை, ஆனந்தம் என்பவைகள் வெளிப்படக் கூடிய முறையில்

www.padippakam.com

மக்களின் ஜனநாயக உரிமைகள் வெளிக்கொணரப்பட வேண்டும். இவைகள் நடைபெற்றனவா? பதிலாக ஆயுத முனைகளில் அராஜகம் தலைவிரித்தாடுகிறது. இதை யாரிடம் செய்தாலும் யாரும் கேட்க முடியாது. துவக்கெடுத்தவன் எல்லாம் தண்டல் காரன் ஆகிவிட்டான். பலவும் மக்கள். தெருவோரத்து தெருவீதிகளிலும், பொது இடங்களிலும், கம்பங்களிலும் காக்கைகளுக்கும் நாய் நரிகளுக்கும் உணவாகினார்கள். இதில் இருந்து நாம் அறியக் கூடியது என்னவென்றால் போராட்டத்தின் போராளிகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு பொது மக்கள் மாற்றையாளர்களையும் மனிதர்களையும் நடத்தப்பட்டமையே. இதனால் போராளியும் பொது மக்களும் இரு வேறு சக்திகளாகியுள்ளனர். இவ்வாறு வேறு படின்

ம இரு சக்திகள் கூடாது படுவது தவிர்க்க முடியாதது. இது வரலாறு தருகின்ற பாடம். இந்த வரலாற்றின் ஓட்டத்தை இன்று எமது தேசத்தின் பல தொகுதிகள் இழந்துள்ளன. இந்த முன்னுரிமை மாற்றம் பெறுது விடுவன் தேசத்தின் ஒவ்வொரு பொது மகனுக்கும் இந்த மரண பயம் இருந்தே வரும்.

இம் மக்கள் தொகையின் வெளிப்பாடுகள் போராட்ட சக்திகளின் பல வீனத்தை பொது மக்களுக்கும், போராட்டச் சக்திகளின் எதிரணிகளுக்கும் போராட்டத்தை இனங்காட்டி விட்டிருக்கின்றன. இவ்வாறு போராட்டமும் போராட்ட சக்திகளும் இனங்காட்டப்படும் போது பொது மக்களிலிருந்து இவர்கள் நிச்சயம் வேறு படுத்தப் படுவார்கள். தமது தனிப்பட்ட சொந்த நலன்களுக்காக தேசத்தையும்



படிப்பகம்

இனத்தையும் ஏன் போராட்டத்தையுமே அடக்கி வைத்து அதில் பெருமை தேட முயலும் சக்திகள் முதலில் வெற்றியடைவது போல் தோன்றினாலும் கடைசியில் தோல்வியைத் தழுவுவதோடு இருந்த இடமே இல்லாது மறையும் நிலை நிச்சயம் உருவாகும். மக்கள் சக்தி மிகப் பலம் வாய்ந்தது. மக்களின் எழுச்சிக்கு முன்னர் எந்த வலிமை வாய்ந்த ஆயுதங்களும் நிலை நிற்க முடியாது. எந்த வலிமையான ஆயுதத்தினாலும் இயக்கும் வகை மனித சக்தியாலேயே தங்கியுள்ளது. இந்த உண்மையை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

போராடும் சக்திகள் தங்களின் பலவீனங்களை மறைப்பதற்காகவே பொது மக்களைக் கொலை செய்கிறார்கள். இந்தக் கொலைகளினால் தங்களின் முதன்மையை பாதுகாக்கச் செய்கின்றார்கள். அரசின் அடாவடித்தனங்கள் கூடுகின்ற போது சிங்களப் பொது மக்களும் குழந்தைகளும் கொலை செய்யப்படுகின்றார்கள். இது மனித நேயமற்ற தன்மை. யுத்தத்திலும் தர்மம் இருப்பதாகச் சொல்கிறார்கள். இதுவும் ஒரு தர்மமோ தெரியவில்லை. சிங்கள மக்களின் பல கொலைகளுக்கு பதில் நடவடிக்கைகள் சிங்கள இனவாத அமைப்புக்களாலும் அரசாலும் எடுக்கப்படுகின்றன. இன்று பரிமாணரின் செயலுக்கு பொது மக்களை இலக்காகியுள்ளனர். இந்த விடுதலையையோ அன்றி மக்கள் விடுதலையையோ விரும்பும் எந்தச் சக்திகளாக இருந்தாலும் அமைப்பாக இருந்தாலும் இப்படியான தான் தோன்றித்தனமான அநாகரீகச் செயல்

தீர வைக்க வேண்டும். இவ்வாறு மகாத் இனத்தை மொழி, மதா சாரத்தை உணர்வுக ளை வேறுபடுத்தி பிரி த்து கொடுமை செய்பவர் கள் ஆட்சியதிகாரத்தை நீங்கள் கையில் கொண் டு வந்தால் அந்த தேச த்தில் எப்படி மக்களுடன் நடப்பார்கள் மக்களா ல் அதிகாரம் கொடுக்க ப்படாத, அதிகாரமற்ற நிலையிலேயே நீதி, நியா யம், தர்மம், அன்பு, க ருணை என்பவைகளைக் காண்பிக்க முடியாத வர்கள் ஆட்சிக்கு வந்தால் அதன் வேதனை யைக் கொடுமையைச் சொல்ல வார்த்தைகள் இருக்குமா? பாரதியின் வார்த்தையில் சொன்னா ல் "பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாஸ்தி ரங்கள்" என்று தேச த்தில இருக்கும் இன வாத அரசுக்கு இயக்க ங்கள் எது ஆட்சிக்கு வந்தாலும் இது தான் உண்மை. இது தான் இன்று தேசத்தில் நடக் கிறது. இதற்கு நாசி மயமாக வேண்டிய வர்கள் நீங்கள். அத னை கிஞ்சித்தும் செய ல் படாமல் உங்களுடை யது. நாசிய உங்கள் கொடிகளும் இயலாமை மறைத்துப் படலாம்.

—— - - - —— வேற்படை

ஒட்டிய வயிறு, சொட்டும் கண்ணீர், கட்டிய கந்தல், முட்டிய கால்கள் இவற்றுக் கோலத்துடன் ஏராளமான மக்கள் பசித்திருக்கையில் சொர்க்கத்தைத் தேடி ஓடுவது, மனித இனத்துக்கே செய்யும் மாபெரும் துரோகமாகும்.

- பாப்லோ நெருடா

www.padippakam.com

# முதலாளித்துவ ஆளுங்கட்சிக்கு அபாய அறிவிப்பு

ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனாவால் இனப் பிரச்சினைக்கு தீர்வாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மாகாணசபைத் திட்டத்தின் முதல் கட்டமாக ஆளுங்கட்சி தமக்கு சாதகமான சூழ்நிலையைப் பயன்படுத்தி தமக்கு சாதகமான பகுதிகளான வடமேல், வடமத்திய, சப்பிரகமுவ, ஊவா ஆகிய நான்கு மாகாணங்களிலும் மாகாணசபைத் தேர்தலை நடாத்தியுள்ளது.

28-4-1988 வியாழக்கிழமை நடாத்தப் பெற்ற மாகாணசபைத் தேர்தலில் பொது மக்கள் அச்சத்துடன் ஜனநாயகத்தை வெறுத்து வாக்களித்ததாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

நான்கு மாகாண சபைகளிலும் 155 ஆசனங்களுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு தேர்தல் நடைபெற்றது. நான்கு மாகாணங்களிலும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் தொகை சுமார் 29 லட்சம் ஆகும் இதில் 60% மான மக்கள் அதாவது சுமார் 17½ லட்சம் மக்கள் வாக்களித்துள்ளனர்.

வாக்களிக்கப்பட்ட 17½ லட்சம் வாக்குகளில் 1½ லட்சம் வாக்குகள் தேர்தல் வாக்களிப்பு முறைகளுக்கு புதுமை முறையால் வேண்டுமென்றே அன்றி சரியாக வாக்குகளை அடையாளமிடத் தெரியாததாலோ நிராகரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிலாபத்தில் 7225 வாக்குகளும் அப்புத்தளையில் 4388 வாக்குகளும் நிராகரிக்கப்பட்டுள்ளன. இந் நான்கு மாகாணங்களிலும்



படிப்பகம்

ஐ.தே. கட்சி, ஐ.சோ. முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீமஜன்கட்சி ஆகியன போட்டியிட்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மகஜன எக்சத் பெரமுன, எக்சத் லங்கா ஜனதா ஆகிய கட்சிகள் மாகாணசபைத் தேர்தல் புறக்கணித்துள்ளன.

கடந்த காலத்தில் நடைபெற்ற வன்முறைகள், அச்சுறுத்தல்கள், அராஜகங்களின் பயம் காரணமாகவும் மாகாணசபைத் தேர்தல் புறக்கணிப்பு கட்சிகளின் ஆதரவாளர்களினாலுமாக 40% மான மக்கள் வாக்களிக்கவில்லை. நான்கு மாகாணங்களிலும் ஐ.தே. கட்சிக்கு 9 லட்சத்து 13 ஆயிரம் வாக்குகளும் ஐ.சோ. முன்னணிக்கு 6 லட்சத்து 63 ஆயிரம் வாக்குகளும் முஸ்லிம் காங்கிரசுக்கு 37 ஆயிரம் வாக்குகளும் கிடைத்துள்ளன. நான்கு மாகாண சபைகளிலும் உள்ள



155 ஆசனங்களிலும் ஐ.தே. கட்சிக்கு 88 ஆசனங்களும், தோற்றுவிக்கப்பட்ட இரு மாகாணங்களை ஆகின்ற ஐக்கிய சோசலிச முன்னணிக்கு 64 ஆசனங்களும், முஸ்லிம் காங்கிரசுக்கு 3 ஆசனங்களும் கிடைத்துள்ளது. ஐ.தே. கட்சிக்கு ஆகக் கூடுதலான ஆசனங்கள் 29, வடமேல் மாகாணத்தில் கிடைத்துள்ளது. நான்கு மாகாணசபை ஆட்சிப் பொறுப்பையும் ஐ.தே. கட்சியே கைப்பற்றியுள்ளது. ஐ.சோ. முன்னணிக்கு ஆகக் கூடுதலான ஆசனங்கள் 20, சப்ரகமுவ மாகாணத்தில் கிடைத்துள்ளதோடு நான்கு மாகாணசபைகளிலும் எதிர் கட்சியாக வந்துள்ள ஐ.சோ. முன்னணி, 42 உறுப்பினர்களைக் கொண்டு ; சப்ரகமுவ மாகாணத்தில் 20 உறுப்பினர்களின் ஆசனங்களை வென்றதால் 22 உறுப்பினர்களைக் கொண்ட

www.padippakam.com

ஆளுங்கட்சியான ஐ.தே.க கட்சிக்கு மிகவும் நெருக்கடியானதும் அதிசய மிக்கதுமான அதிர்ச்சியாக வந்துள்ளது. நான்கு மாகாணசபைகளிலும் மூன்று தமிழர்களும் 10 முஸ்லிம்களும் வெற்றியீட்டியுள்ளனர். ஊவா மாகாணத்தில் உள்ள பதுளை மாவட்டத்தில் ஐ.தே.க கட்சி சார்பில் போட்டியிட்ட இரு தமிழரும், சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள கேகாலை மாவட்டத்தில் ஐ.சோ.மு முன்னணி சார்பில் போட்டியிட்ட அண்ணாமலை இராஜையாவும் தெரிவாகினர்.

ஐ.தே.க. கட்சி சார்பில் 6 முஸ்லிம்களும் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் 3 முஸ்லிம்களும் ஐ.சோ.மு. முன்னணி சார்பில் ஒரு முஸ்லிம் உறுப்பினரும் தெரிவாகினர்.

| | ஐ.தே.க | ஐ.சோ.மு | ஸ்ரீ.ல.மு.கா |
|---|---|---|---|
| வடமேல் மாகாணம் | 23 | 19 | 2 |
| மத்திய மாகாணம் | 19 | 12 | -- |
| சப்ரகமுவ மாகாணம் | 22 | 20 | -- |
| ஊவா மாகாணம் | 18 | 13 | 1 |
| | 88 | 64 | 3=155 |

இனி மாகாண ரீதியாக தேர்தல் முடிவுகளை பார்ப்போம்.

## வடமேல் மாகாணம்

இம் மாகாணத்தில் உள்ள குருநாகல், புத்தளம் ஆகிய இருமாவட்டங்களிலும் ஐ.தே. கட்சி, ஐ.சோ.மு. முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகளும் போட்டியிட்டன.

குருநாகல் மாவட்டத்தில் 35 உறுப்பினர்களையும் புத்தளம் மாவட்டத்தில் 15 உறுப்பினர்களையுமாக



படிப்பகம்

மொத்தம் 50 உறுப்பின
ர்களை தெரிவு செய்வதற்
காக 890 வாக்களிப்பு
நிலையங்களில் குருநாகல்
மாவட்டத்தில் 762468
வாக்காளர்களும் புத்த
ளம் மாவட்டத்தில்
308215 வாக்காளர்க
ளுமாக மொத்தம்
10 70 683 வாக்காளர்
கள் வாக்களித்துள்ள
னர்.

குருநாகல் மாவட்ட
த்தில் ஐ.தே.கட்சிக்கு
257161 வாக்காளர்கள்
வாக்களித்ததால் 21
உறுப்பினர்கள் (தெரி
வாகினர். ஐ.சோ.
முன்னணிக்கு 1,60,704
வாக்காளர்கள் வாக்களி
த்ததால் 13 உறுப்பினர்
கள் தெரிவாகினர்.
முஸ்லிம் காங்கிரஸ் உறுப்
பினர் ஒருவர் 16122 வாக்
காளர் வாக்களித்ததால்
தெரிவானார்.

புத்தளம்
மாவட்டத்தில் ஐ.தே.
கட்சிக்கு 84810 வாக்கா
ளர் வாக்களித்ததால்
8 உறுப்பினர் தெரிவா
கினர். ஐ.சோ. முன்ன
ணிக்கு 70270 வாக்கு
கள் கிடைத்ததால் 6
உறுப்பினர் தெரிவாகி
னர். முஸ்லிம் காங்கிர
ஸ் உறுப்பினர் ஒருவர்
12618 வாக்குகள் கிடை
த்ததால் தெரிவானார்.
ஆக மொத்தம் வடமேல்
மாகாணத்தில் ஐ.தே
கட்சி 29 ஆசனங்களை
கைப்பற்றி ஆட்சியமைத்
துள்ளது. ஐ.சோ. முன்ன
ணி 19 ஆசனங்களை
கைப்பற்றி எதிர்க்கட்சி
யானது.

வடமேல்
மாகாணத்தின் மாகாண
சபை அலுவலகம் குருநா
கலில் அமைக்கப்பட்டுள்
ளது. இம்மாகாண சபை
யின் ஆளுனராக வைத்திய
ஆராய்ச்சி அமைச்சர்
திரு. டி. பி. விஜேதுங்கா
ஜனாதிபதியால் நியமிக்கப்
பட்டுள்ளார். இவர் தன
து அமைச்சர் பதவியிலி
ருந்து விலகி ஜனாதிபதி
யின் முன்பு ஆளுனராக

www.padippakam.com

சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இம் மாகாண சபையின் முதலமைச்சராக கட்டுகம்பொல எம்.பி.யும். குருநாகல் மாவட்ட அமைச்சருமான 47 வயதுடைய திரு. காமினி ஜெயவிக்ரம பெரேரா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## வட மத்திய மாகாணம்

இம் மாகாணத்தின் உள்ள அநுராதபுரம், பொலநறுவ ஆகிய இரு மாவட்டங்களிலும் ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய சோசலிச முன்னணி ஆகிய இரு கட்சிகளும் நேரடிப் போட்டியில் போட்டியிட்டன.

அநுராதபுரம் மாவட்டத்தில் 21 உறுப்பினர்களையும், பொலநறுவ மாவட்டத்தில் 10 உறுப்பினர்களையுமாக மொத்தம் 31 உறுப்பினர்கள் தெரிவு செய்வதற்காக 474 வாக்களிப்பு நிலையங்களில் அநுராதபுரம் மாவட்டத்தில் 324317 வாக்காளர்களும் பொலநறுவ மாவட்டத்தில் 1,59,265 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில் ஐ.தே.கட்சிக்கு 1,12,760 வாக்குகள் கிடைத்ததால் 12 உறுப்பினர் தெரிவாகினர். ஐ.சோ.முன்னணிக்கு 85324 வாக்குகள் கிடைத்ததால் 9 உறுப்பினர் தெரிவாகினர். பொலநறுவ மாவட்டத்தில் 30,081 வாக்குகள் கிடைத்ததால் ஐ.தே.கட்சிக்கு 7 உறுப்பினர் தெரிவாகினர். ஐ.சோ.முன்னணிக்கு 14,652 வாக்குகள் கிடைத்ததால் 3 உறுப்பினர் தெரிவாகினர். ஆக மொத்தம் வடமத்திய மாகாணத்தில் 19 ஆசனங்களைப் பற்றி ஐ.தே. கட்சி ஆளுங்கட்சியானது. ஐ.சோ. முன்னணி 12 ஆசனங்களைப் பற்றி எதிர் கட்சியானது.



படிப்பகம்

www.padippakam.com

வடமத்திய மாகாணத்தின் மாகாணசபை செயலகம் அநுராதபுரத்தில் இயங்கும் இம் மாகாணசபையின் ஆளுனராக திட்ட அமுலாக்கல் அமைச்சர் திரு. டி. பி. வெலகெதர தனது அமைச்சர் பதவியை துறந்து ஜனாதிபதி முன் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இம்மாகாணசபையின் முதலமைச்சராக கெக்கிராவ முன்னாள் எம். பி. திரு. ஜி. டி. மகிந்த சோம தெரிவு செய்யப் பட்டுள்ளார். இவருக்கு வயது 60. இவர் மாகாணசபை தேர்தலில் போட்டியிட முன்பு தனது பதவியை துறந்த பின்பே போட்டியிட்டார்.

## சப்பிரகமுவ மாகாணம்

இம் மாகாணத்தின் உள்ள இரத்தினபுரி, கேகாலை ஆகிய இரு மாவட்டங்களிலும் ஐ. தே. கட்சியும், ஐ. சோ. முன்னணியும் தேர்தல் போட்டியில் போட்டியிட்டன.

இரத்தினபுரி மாவட்டத்தில் 23 உறுப்பினர்களையும் கேகாலை மாவட்டத்தில் 19 உறுப்பினர்களையுமாக மொத்தம் 42 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 820 வாக்களிப்பு நிலையங்களில் இரத்தினபுரி மாவட்டத்தில் 447426 வாக்காளர்களும் கேகாலை மாவட்டத்தில் 423246 வாக்காளர்களுமாக மொத்தம் 870672 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் ஐ. தே. கட்சிக்கு 147301 வாக்குகள் கிடைத்ததால் 12 உறுப்பினர் தெரிவாகினர். ஐ. சோ. முன்னணிக்கு 124432 வாக்குகள் கிடைத்ததால் 11 உறுப்பினர் தெரிவாகினர். கேகாலை மாவட்டத்தில் ஐ. தே. கட்சிக்கு 127338 வாக்குகள் கிடைத்ததால் 10 உறுப்பினர்

படிப்பகம்

www.padippakam.com

தெரிவாகினர். ஐ.தே.மு. முன்னணிக்கு 1,09,227 வாக்குகள் கிடைத்ததால் 9 உறுப்பினர் தெரிவாகினர். ஆக மொத்தம் சப்ரகமுவ மாகாணத்தில் 22 ஆசனங்களைப் பற்றி ஐ.ம.சு. கட்சி ஆளுங்கட்சியானது. 20 ஆசனங்களைப் பற்றி ஐ.தே.மு. முன்னணி வலிமை மிக்க எதிர் கட்சியானது.

சப்ரகமுவ மாகாணசபை செயலகம் இரத்தினபுரியில் இயங்கும். கொழும்பு பெருநகர ஆணைக்குழு தலைவர் திரு. நோயல் விமல் சேன ஆளுநராக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார் இரத்தினபுரி எம்.பி, கி.வி. புஞ்சி நிலமே முதலமைச்சராகினர். 55 வயதுடைய இவர் முன்னாள் பிராந்திய அபிவிருத்தி அமைச்சராவார்.

## ஊவா மாகாணம்

இம் மாகாணத்தில் உள்ள பதுளை, மொனராகலை ஆகிய இரு மாவட்டங்களிலும் பதுளை மாவட்டத்தில் ஐ.ம.சு. கட்சி, ஐ.தே.மு. முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய மூன்று கட்சிகளும் மொனராகலை மாவட்டத்தில் ஐ.ம.சு.கட்சி, ஐ.தே.மு. முன்னணி ஆகிய இரு கட்சிகளும் போட்டியிட்டன. பதுளை மாவட்டத்தில் 19 உறுப்பினர்களையும் மொனராகலை மாவட்டத்தில் 13 உறுப்பினர்களையுமாக 32 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 488 வாக்களிப்பு நிலையங்களில் பதுளை மாவட்டத்தில் 3,19127 வாக்காளர்களும் மொனராகலை மாவட்டத்தில் 153477 வாக்காளர்களுமாக மொத்தம் 472604 வாக்காளர்கள் வாக்களித்துள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

பதுளை மாவட்டத்தில் ஐ.தே.கட்சிக்கு 118289 வாக்குகள் கிடைத்ததால் 11 உறுப்பினர் தெரிவானார். ஐ.சோ.முன்னணிக்கு 78240 வாக்குகள் கிடைத்ததால் 7 உறுப்பினர் தெரிவாகினர் 8126 வாக்குகள் கிடைத்ததால் முஸ்லிம் காங்கிரசுக்கு ஒரு உறுப்பினர் தெரிவானார்.

மொனராகலை மாவட்டத்தில் ஐ.தே கட்சிக்கு 35463 வாக்குகள் கிடைத்ததால் 7 உறுப்பினர் தெரிவானார். ஐ.சோ.முன்னணிக்கு 27082 வாக்குகள் கிடைத்ததால் 6 உறுப்பினர் தெரிவாகினர் ஆகமொத்தம் ஊவா மாகாணத்தில் ஐ.தே கட்சி 18 ஆசனங்களை கைப்பற்றி ஆளுங்கட்சியானது. ஐ.சோ.முன்னணி 13 ஆசனங்களை கைப்பற்றி எதிர் கட்சியாகியது.

ஊவா

மாகாணத்தின் மாகாணசபை செயலகம் பதுளையில் இயங்கும் தொழில் அமைச்சர் திரு.பி.சி.இம்புலான ஆளுநராக சத்திய பிரமாணம் செய்து கொண்டார். வெலிமட எம்.பி. திரு பேர்சி சமரவீர முதலமைச்சராக தெரிவு செய்யப்பட்டார்.

நான்கு மாகாணசபைகளுக்கும் முதலமைச்சர்கள் சத்திய பிரமாணம் செய்து கொண்டதும் ஒவ்வொரு மாகாணத்துக்கும் 4 அமைச்சர்களை முதலமைச்சர் தெரிவு செய்வார். தேர்தல் விபரங்களை பார்க்கும் போது ஐ.தே.கட்சிக்கு ஆதரவு முன்பிலும் பார்க்க குறைந்தே காணப்படுகிறது. ஐ.சோ.முன்னணிக்கு கிடைத்திருக்கும் ஆதரவு மிகப்பெரிய வெற்றியாகும். இது



படிப்பகம்

கூலிகள் இருபது வருடங்களுக்கு முன்பிருந்த நிலைமை எடுத்துக்காட்டியுள்ளார்கள். இந்த கூலிகளின் வாழ்வியத்தை மக்கள் பெரிதும் வரவேற்றுள்ளது, மக்களின் அரசியல் நிலைமை வெளிப்படையாக எடுத்துக் காட்டியுள்ளது.

இச் சந்தர்ப்பத்தை இந்த கூலித் தலைமைகள் சரியாகப் பயன்படுத்துவதோடு உண்மையானவர்களாய் மக்களுக்காகவும் நாட்டுக்குமாய் உழைத்து இலங்கையின் ஐக்கியத்தை வளர்க்கப் பாடுபட வேண்டும்.

-சின்னவன்-

## அன்பான வாசகர்களே!

தங்கள் ஆக்கங்களையும் விமர்சனங்களையும் "வெகுஜனம்" பெரிதும் வரவேற்கிறது. ஆக்கங்களை செம்மையாக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவுக்கு அதிகாரமுண்டு.

இதுவரை வாசகர்கள் அனுப்பியுள்ள ஆக்கங்கள் நமக்கு வந்து சேர்ந்த முறைப்படி மாதாமாதம் வெளிவரும். ஆக்கங்களுக்கு படைப்பாளிகளே பொறுப்பானவர்களாகையால் ஆக்கங்களை அனுப்பும் போது தங்கள் பெயரையும், விலாசத்தையும், சேர்த்து அனுப்புமாறு தோழமையுடன் கேட்டுக் கொள்கின்றோம். படைப்பாளிகளின் பெயரோ, விலாசமோ இல்லாத ஆக்கங்கள் வெகுஜனத்தில் பிரசுரிக்கப்பட மாட்டாது.

ஆசிரியர் குழு.

உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி-

A. VELAYUTHAM.
MITT WEG STR-21
4300 ESSEN-1
WEST GERMANY

www.padippakam.com

# சங்கரப்பிள்ளையின் சந்தி அரசியல்

சங்கரப்பிள்ளையரும் வாத்தியாரும் சங்கரப்பிள்ளையரின் கடையில் வதிரும் புதினமாக இருந்த அன்மைய தினசரியை ஆளுக்கொரு பேப்பராக உன்னிப்புடன் வாசித்துக்கொண்டிருந்தனர். ஏதோ ஒரு செய்தியை வாசித்து முடித்த சங்கரப்பிள்ளையருக்கு வாத்தியாரிடம் அதைப்பற்றி கதைக்க வேண்டும் போல் அரிப்புத்தட்டியது. பேப்பரில் மூழ்கிப்போயிருந்த வாத்தியாரை சங்கரப்பிள்ளையர் இடைமறித்தார்.

வாத்தியார் உண்மையை உண்மையைச் சொல்லுங்கோ இந்த இயக்கங்கள் அரசியல் கட்சியாக பதிவுசெய்து பன்னைத்தேர்தலுக்கு போன வாத்தியார். எங்களுக்கு நாடு வேணும் உரிமை வேணும் என்டெல்லாம் சொல்லிப் போட்டு இப்ப அரசாங்கத்தோட சேர்ந்து கொண்டு ஆளைப் பேக்காட்டு கினம்

சங்கரப்பிள்ளையரின் விளங்காத கதையைக் கேட்டவுடன் வாத்தியாருக்கு ஆத்திரம் கொண்டு வந்தது வாத்தியார் முறைப்பாக ஒருபார்வை பார்த்து விட்டு பேப்பரில் மூழ்கினார் சங்கரப்பிள்ளையர் விடுவதாயில்லை.

என்ன இருந்தாலும் நான் அப்போட் பண்ணிற போடியள் பொடியள் தான் வாத்தியார். போராட்டம் என்றால் போராட்டம் தான் வேறை கதையில்லை. உண்மையில் நான் கேட்டதை ஒருக்கா விளங்கப் படுத்துங்கோ.

வாத்தியாருக்கு கோபம் வெறித்துக்கொண்டு வந்தாலும் போராட்டம் என்றால் போராட்டம் தான் என்ற சங்கரப்பிள்ளையரின் விளங்காத்தனத்தை நினைத்த போது சிரிப்பு வந்தது.

சங்கரப்பிள்ளை திரும்ப திரும்ப உமக்கு நான் ஒரு விசயத்தை சொல்லிக் கொண்டிருக்கேலாது.



படிப்பகம்

இருந்தாலும் நீர் தேசியபோரா
ளிகளும் எங்களுக்காகச் சொல்லு
றன் இயக்கங்கள் நீர் சொன்ன
மாதிரி உரிமை, நாடு என்றுதான்
போராடியவர்கள் ஆனால் நான்
தான் பெரியவன் என்ற சுட்டா
ட்டுக்களைந்தால் இயக்கங்களு
க்குள்ளே ஐக்கியம் சீர்குலைய
போச்சு இதை நீர் நேர்மையாக
விளங்கும் திரும்ப திரும்பச் சொல்லு
றான் ஆனால் உனக்கு மண்ட
யில் ஏறமாட்டேன் என்கிறது.
இயக்கங்களின் ஐக்கியம் சீர்
குலைந்ததால் தான் இந்தி
ய இலங்கை ஒப்பந்தம் வந்தது
மக்கள் வரவேற்றார்கள். மக்க
ள் சமாதானத்தையும் அமைதி
யையும் விரும்பினார்கள் இயக்
கங்களும் தாங்கள் மாகாண
சபையை ஏற்கிறோம் அரசியல்
செய்கிறோம் ஒப்பந்தம் நல்ல
தும் என்று கூறிக் கொண்டு
இந்தியாவிலிருந்து வந்தார்கள்
இதில் ஒன்றாகச் சேர்க்க
வேண்டும் நீர் ஒரு இயக்கம்
தானும் ஏன் ஒப்பந்தத்தை
ஏற்க வில்லை. போராட்டம் தான்
தீர்வு என்று கூறினீர்.
அரசியல் செய்ய வந்தார்கள்
முன்பு படிச்சக் கொண்டு
கொழும்புக்கு ஓடிப் போய் இவை



கால சபையில் கதிரைக்கு சண்
டை பிடிச்சார்கள் இதுக்குப்
பெயர் என்ன காணும் அரசிய
லீ செய்யிறம் என்றதால்தானே
இடைக்கால நிர்வாக சபையில்
கதிரை கேட்டவை.

நாங்கள் அரசியல் செய்ய
மட்டும் இந்திய இராணுவம்
போகும் போது ஆயுதங்களை
எங்களிடம் ஒப்படைத்துவிட்டு
போக வேணும் என்கிறது ஒரு
கூட்டம். ஒரு சங்கராப்பிள்ளை
யர் நேர்மையாகத் தான் கேட்கி
றன் இவை ஆருக்காக அடி
பணிந்து போறது.

ஜெனிவாவில் ஒரு கூட்டத்
தைப் பற்றி பார்க்க வேண்டும்
அவை தானும் முழு ஆயுதங்களை
யும் ஒப்படைச்சவை என்று
போன கிழமை பார்த்தால் இவை
ஆயுதத்தை எடுத்து சுடுபவர்களும்
என்ன ஆயுதத்தையும் ஒப்ப
டைச்ச ஒரே இயக்கம் இவை
தானென்றால் இவை சுட்டதுவ
க்குகள் வானத்தில் இருந்து
குதிச்சதோ. இதில் வேடிக்கை
என்னவென்றால் இவை நங்கு
ளுக்கு கதிரையில் ஆசை
யில்லை நாங்கள் அரசியல்

செய்ய மாட்டம் என்று சொல்லுகிறம் அரசாங்கம் தேர்தல் ஆணையாளரிடம் இவையை அரசியல் கட்சியாக அங்கீகரிக்கும்படி கூறியிருக்கு உள்ளுக்குள்ளாலை விளையாடுற இவர்கள் யார்? யோசிச்சுப் பாருங்கோவன்

இன்றைக்கு கூட்டம் ஜனாதிபதியை சந்திக்கிறதும், அத்துலத்முதலியை சந்திக்கிறதும் தேவைக்களை சந்திக்கிறதாயும் ஒரே அட்டகாசம் இவர்கள் முன்பு கூறியவைகளை யோசிச்சுபாரும் பாசிச வெறியன் ஜேஆர் அத்துலத்முதலி என்றெல்லாம் வர்ணிச்சதோட இப்ப இரகசியபேச்சுகள். இதில் வேடிக்கை பாரும் தேர்தல் ஆணையாளர் புதிய அரசியல் கட்சிகளை பதியும்படி அறிவித்தார். இவையும் பதிந்தவை ஆனால் இவர்களை அரசியல் கட்சியாக ஏற்க வில்லை காரணம் என்னடாவென்றால் அறிவித்த திகதி முடிஞ்ச பிறகு தானாம் விண்ணப்பம் கொடுத்தவை அது நிராகரிக்கப்பட்டுப் போச்சுதாம் ஒரு விண்ணப்பத் திகதியைப் பார்த்து விண்ணப்பிக்கத் தெரியாத இவையெல்லாம் எங்கடை தலைமைகள், அரசியல் கட்சிகள் இவைக்க வெட்கமாயில்லை. தங்களை இடது சாரிகள் என்று சொல்லிப்போட்டு இப்ப வலதுகளோட பின் கதவால பேச்சு இவையார் காணும்?

அரசியல் செய்யிறம் என்று வந்தால் ஒழுங்காக அரசியல் கட்சியாக பதிந்து ஜனநாயகத்திற்கு மதிப்பு கொடுத்து வெற்றியென்றால் வெற்றியை தோல்வியென்றால் தோல்வியை ஏற்று மக்களுக்கு நல்லது செய்யிறது தான் முறை. அரசாங்கம் எங்கடை எதிரி எதிரி தான் இதை விட்டிட்டு அரசாங்கத்தோடை அரசிடை பங்கிடையாகிக் கொண்டு நாங்கள் அரசியல் செய்ய இல்லை. எங்களுக்கு கதிரையில ஆசை இல்லை. என்று புலுடா விடக்கூடாது காணும் நன்றாக யோசியும் நான் வாறன்

வாத்தியார் வீட்டுக்கு செல்வதற்கு நடையைக் கட்டினார் சங்கரப்பிள்ளையர் இடைமறிச்சு தெரியாமல் தான் கேக்கிறன்

வாத்தியார் இவ்வளவு விசயங்களையும் எங்க படிச்சனீங்கள்

வாத்தியார் சிரிச்சுக் கொண்டு சங்கரப் பிள்ளையர் நானும் நீரும் ஒவ்வொரு நாளும் வீரகேசரி படிக்கிறம் நான் சொன்ன விசயங்கள் எல்லாம் பேப்பரிலை தான் வந்திருக்கு எங்கடை பிரச்சனைகளுக்கு எங்கடை தலைமைகள் என்ன சொல்லுகினம். யார் ஆருக்காக நடக்கினம், யார் ஏமாத்துகினம் என்று அவையின்ர அறிக்கைகள் வாசித்து அறிந்து ஒழுங்கான தலைமைகளை ஆதரிக்க வேணும் முன்பும் இப்படித்தான் தமிழ்த் தளபதி அமிர் பேசினால் குண்டூசி விழுந்தால் சத்தம் கேட்கும் அளவிற்கு அமைதியாக இருந்து கேட்டுவிட்டு என்ன பேசினவர் என்று கேட்டால் ஒண்டும் விளங்கேல்லை ஆனால் நல்லாப் பேசினவர் என்று சொன்னியள் ஏமாந்து போனியள் இப்பவும் பேப்பரிலை வாற எங்கடை தலைமைகளின்ர அறிக்கைகளைப் படிக்காதேயுங்கோ. எம்.ஜி.ஆர் ஜெயலலிதாவுக்கு என்ன முறை வேணும்; அநுராதா வீட்டு நாய் எத்தனை குட்டி போட்டது அதுகளை விழுந்து விழுந்து படியுங்கோ. பிறகு யாரும் சுடுபட்டு செத்துப்போச்சினமாம் இந்தியன் ஆமி சுட்டதாம் என்றவுடன் போராட்டம் போராட்டம் என்று சன்னதம் கொள்ளுங்கோ. ஒன்று மட்டும் சொல்லுறன் சங்கரப் பிள்ளையர் பாசிசம் என்றால் உமக்கு என்னவென்று தெரியுமோ?

சங்கரப் பிள்ளையர் கேள்விப் படாத சொல் என்று பேந்தப் பேந்த முழித்தார்.

தெரியாவிட்டால் யாரிட்டையும் கேட்டாவது தெரிஞ்சு வைச்சிருங்கோ கெதியிலை அநுபவிக்கப் போறியள் அப்ப அதுக்குப் பெயர்தான் பாசிசம் என்று விளங்க வேணும் இப்பவும் அநுபவிக்கிறியள் ஆனால் மற்றவர்களுக்கு நடந்தால் எங்களுக்கில்லை தானே என்று உங்கடை குடாப்புத்தியால் உங்களுக்கு விளங்கவில்லை எல்லாம் விளங்கும் கொஞ்சம் பொறுங்கோ

வாத்தியார் வீட்டை
நோக்கி நடந்தார். சங்கரப்
பிள்ளையர் பேயறைந்தவர்
போல் நின்றார் நானும் தான்
ஒவ்வொரு நாளும் பேப்பர்
படிக்கிறன் எனக்கு ஒன்றும்
கண்ணில படுது இல்லை பட்டா
லும் இந்த மரமண்டையில
ஏற மாட்டென் என்கிறது
வாத்தியார் என்னண்டு தான்
படிச்சுத் தள்ளுறாரோ. என்ன
இருந்தாலும் நாலெழுத்து
படிச்ச மனுசன் வாத்தியார்
வாத்தியார்தான். அதசரி
இவர் சொன்ன பாசிபம்
என்ன சாமான் ஒரு வேளை
விற்கிற சாமானாய் இருக்கு
மோ அவர் நல்லா அனுபவி
க்கப் போறியள் என்று சொல்
லுறார் அப்படி என்றால் விற்கிற
சாமானாய்த்தான் இருக்க வேணு
ம் அப்படியென்றால் பாசிபம்
கிலோ என்ன விலையோ
தெரியாது. கொஞ்சம் வாங்
கிப் பதுக்கினால் நட்டுப்
பாடான நேரம் விற்கலாம்
என்று வியாபாரப் புத்தியில்
சிந்திக்கவராய் ஏ.யோட்
டத் தொடங்கினார்
சங்கரப்பிள்ளையர்.

—.....—

## "வெகுஜனம்"

**சந்தாவிபரம்**

6 மாதங்களுக்கு 20 DM.

1 வருடத்திற்கு 40 DM.

ஜேர்மனி தவிர்ந்த மற்றைய நாடுகளுக்கு தபால்செலவு தனி.

விபரங்களுக்கு.

A. ALEX
ZIMMER OG.3
KIRCH WEG - 111
NIEDER BERGHEIM
4788 WARSTEIN-2
WEST GERMANY.

www.padippakam.com

# இவர்கள் வித்தியாசமானவர்கள்

சிறுகதை

ரவி

வானில் இருள் சூழ்ந்து எங்கும் அமைதி நிலவியது. விமல் காலை நீண்ட தூரம் பிரயாணம் செய்து சமுதாய மாற்றத்திற்கான பணியில் ஈடுபட்ட களைப்பில் படுக்கைக்குச் சென்றான். ஆனால் நீண்ட தொலைவில் இடை இடையே கேட்ட துப்பாக்கி சத்தமும் ஊர் நாய்கள் ஊளையிட்ட சத்தமும் அவன் கண் இமைகளை தூங்கவிடாது தடுத்தன. இவ் வேளையில் தான் எடுத்த நீண்ட கடினமிக்க பணியையும் இம் முடிவுக்கு வந்த காரணத்தையும் சிந்திக்கலானான்.

எமது இனத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் என்று கருதப்படும் சமூகத்தை சார்ந்தவன் விமல். இவன் தனது வாழ்க்கையை கொழும்பில் ஆரம்பித்தவன். வடக்கில் ஏற்பட்ட போராட்ட செய்திகளை பத்திரிகை, வானொலி மூலமாக கேட்டு அறிந்து கொண்டான். இவன் தனது சிங்கள நண்பர்களிடம் தம் இனத்தவரை பிரித்து தனித்து ஆட்சி அமைத்து கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது என வலியுறுத்தி வந்தான் ஆனால் இவனது சிங்கள நண்பர்களில் சிலர் தமிழ் மக்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டனர். இனவெறித் தன்மையுடன் இரு சாரார்களும் காலத்துக்கு காலம் வைக்கப்பட்ட அரசியல் மேடைப் பேச்சுக்களை, நடைமுறை வேலைத் திட்டங்களை இவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இலங்கை வாழ் சமூகத்தை முன்னேற்றக் கூடிய ஓர் அரசியல் பொருளாதார மாற்றத்தை காண்பதற்கு விரும்பினர். இதற்கு ஏற்ப தமது அரசியல் கருத்துக்களாக மாக்சிச லெனினிச கொள்கைகளை ஏற்று அதன் அடிப்படையில் செயல்பட முனைந்தனர் ஆனால் பழைய அரசியல் வாதிகளினால் வளர்த்து விடப்பட்ட இனவெறித் தன்மைகள் கொழும்பில் இடம் கொடுக்கவில்லை இதற்கு வழி அமைத்தால் போல் 1983ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தினால் விமல் பாதிப்படைந்த நிலையில் வடக்கில் குடியமர்ந்தான் இங்கு கப்பலில் வரும் போது வடக்கில் ஆயுதம் ஏந்தி போராடுபவர்கள் முன் நிலையில் தனித் தமிழ் என்ற கோசத்



படிப்பகம்

www.padippakam.com

டுடன் போராடாது இலங்கையின் திட்டமிட்ட அரசியல் சமூக பொருளாதார விடிவுக்கு போராட வேண்டும் என்ற தனது கருத்தை வலியுறுத்தி எல்லோரையும் சரியான பார்வையில் சிந்திக்க வைத்து போராட்டத்தை முன் எடுக்க வேண்டும் என நினைத்தான். இதற்கான தொடர்புகளை தனது சிங்கள நண்பர்களூடாகவும் ஏற்படுத்திக் கொடுக்கலாம் எனவும் எண்ணியிருந்தான். இங்கு வந்தவுடன் இந்த சமுதாய சூழல்கள் புதிய அனுபவத்தை கொடுத்தன. உயர் கல்வி கற்க பாடசாலை சென்ற போது பெரும் பகுதி மாணவர்கள் இனவெறி தன்மை கொண்டவர்களாகவும் எவ்வழியில் எமது போராட்ட ஆதரவுகளை செலுத்த வேண்டும் என்ற முற்போக்கு சிந்தனை அற்றவர்களாகவும், காணப்பட்டனர் அத்துடன் சமுதாயத்தின் மத்தியில் பிரதேச வேறுபாடுகள், சாதி மத வேறுபாடுகளையும் காணக்கூடியதாக இருப்பதை அறிந்தான் இது பற்றிய கருத்துக்களை சில நண்பர்களுடன் பகிர்ந்து கொண்டான் பெரும் பகுதி மக்கள் தமிழ் என்ற கோரிக்கையை முன் வைத்தனர் தவிர இவ் சமுதாய இறைபாடுகள் பற்றி சிந்திக்க தொடங்கவில்லை சிவா என்னும் நண்பன் மாத்திரம் இந்த சமுதாய மாற்றத்தை போராட்டத்துடன் முன்னெடுப்பதன் மூலம் இவ் இறைபாடுகளை நிவர்த்தி செய்ய முடியும் என கூறினான். தாம் தனித்து ஆட்சி கேட்பதற்கான காரணத்தையும் கடந்த காலத்தில் சிங்கள பெரும்பான்மை மக்களுடன் ஒன்றிணைந்து வாழ்வதற்கு மேற்கொண்ட முயற்சிகளையும் கூறினான் இவற்றை ஓர் ஆய்வாகக் கொண்டு விமல் சிவாவுடன் நன்றாக இணைந்து பழகினான். இச் சந்தர்ப்பத்தில் விமலுக்கு தனது வீட்டின் பக்கத்திலுள்ள ராகினி என்னும் பெண்ணுடன் தொடர்பு கிடைத்தது. இத்தொடர்பு நாளடைவில் காதலாக மலர்ந்தது.

அவர்கள் வீட்டில் அதிகாலையில் சித்திரவதை செய்வது போன்ற அழுகை கேட்பது உண்டு. ராகினி போராட்ட அமைப்புக்களுக்கிடையிலுள்ள இறைபாடுகளையும், சமூகத்திலுள்ள குறைபாடுகளையும் எடுத்து கூறுவாள். சிவாவும் ஓர் அமைப்புடன் சம்பந்தப்பட்ட விடயத்தைக் கூட ஒருநாள் கூறியதுண்டு. ஆனால் தனது வீட்டில் இவ் அழுகைக்கான காரணத்தை கூறியதில்லை



படிப்பகம்

www.padippakam.com

விமல் அது பற்றி ராகினியிடம் சந்தித்த போது கேட்டு விட்டான். அவள் கூறிய காரணங்கள் மேலும் வியப்பையும் அதிர்ச்சியையும் உண்டாக்கியது. ராகினி கூறினாள்,

தனது அப்பா புகையிரத திணைக்களத்தில் வேலை செய்யும் அதிகாரி என்றும் அம்மா பாடசாலை சங்கீத ஆசிரியை என்றும் எல்லோரும் வேலைக்கு சென்று விடுவதினால் ஒரு மலையக பெண்ணை வேலைக்கு வைத்திருப்பதாகவும் அப்பெண்ணுக்கு அம்மா கண்ணில் மிளகாய் தூள் நெருப்புக்கொள்ளிகளால் சுட்டு சித்திரவதை மேற்கொள்வதுண்டு என்றும் நாளுக்கு ஒரு தடவை மட்டும் சாப்பாடு கொடுப்பது என்றும் கூறினாள். இறுதியில் கிழமையில் ஒரு தடவை வீட்டுக்கு வரும் அப்பாவுடன் நானும் சேர்ந்து அம்மாவின் செயல்களுக்கு பிரச்சினைப்படுவது உண்டு. ஓர் நாள் மலையக பெண்ணின் தகப்பனார் இதை கேள்வியுற்று பெண்ணை அழைத்துச் செல்வதற்கு வீட்டுக்கு வந்தார். ஆனால் அம்மா பணத்தைக் கொடுத்து சமாளித்து விட்டார்கள். தகப்பனுடன் அனுப்பி வைக்காதிருந்தமையால் அப்பா அம்மாவுடன் கடும் பிரச்சினைக்குள்ளாகி விவகாரத்துடன் முடிவடைந்து விட்டது என்றாள். படித்தவர்கள் எனக்



கூறிக் கொண்டு ஆயுதம் ஏந்தி போராட முற்பட்ட சமுதாயத்தை ஒரு தடவை விமல் எண்ணி சிரித்துக் கொண்டான். நாளடைவில் விமலுடன் ராகினியின் தொடர்பை கேள்வியுற்ற ராகினியின் தாயார் தாழ்த்தப்பட்ட சமூகத்தை சார்ந்தவன் என அவர்களின் காதல் உணர்வுகளுக்கு தடை விதிக்கப்பட்டது. இவ் தடைகள் எல்லாம் இவர்கள் இருவரும் தகர்ந்து எறிந்து வாழ்க்கையில் ஒன்றிணைந்தனர்.

சிவா செயல்பட்டு வந்த அமைப்புடன் தன்னை இணைத்து சமூக அரசியல் பொருளாதார மாற்றத்திற்கான வேலைத் திட்டத்தில் முழுமையாக இணைந்து கொண்டான்.

**கவனமாயிருப்போம் !**
**விழிப்போடிருப்போம் !**
**உஷாராயிருப்போம் !**
**புரட்சிகரத் தலைமையின் கீழ் அணிதிரண்டு**
**மக்கள் யுத்தப் பாதையில் முன்னேறுவோம் !**

www.padippakam.com

# சர்வதேச அநுபவங்களிலிருந்து

# இலங்கையின் தேசிய இனப்பிரச்சனை

## சோவியத் யூனியன்

சோவியத் யூனியனில் தேசிய இனப்பிரச்சனைக்கு மிகச் சிறந்த முறையில் தீர்வு காணப்பட்டுள்ளது. ரஸ்சியாவில் மன்னர் ஆட்சிக்காலத்தில் அங்கிருந்த அனைத்து தேசிய இனங்களும் அடக்கி ஒடுக்கப்பட்டு வந்தன. கிழக்கு ஐரோப்பிய நாடுகளான ரஸ்சியா, போலந்து, செக்கோசிலாவாக்கியா ஆகிய நாடுகள் நூற்றுக்கும் மேற்பட்ட தேசிய இனங்களைக் கொண்டிருந்தன. இவை தேசிய இன ஒடுக்குதலுக்கும் உள்ளாகி இருந்தன இத் தேசிய இன மக்களை ஒன்று படுத்தி மொத்தமாக ஒரு ஆட்சி மாற்றத்திற்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டுமாயின் தேசிய இனப் பிரச்சனைக்கு என்ன தீர்வு? என்ற கேள்விக்கு பதில் அளித்தாக வேண்டியிருந்தது. இவ் விவாதத்தில் பலர் கலந்து கொண்டனர்.

தேசிய இனங்களுக்கு கலாச்சார சுயநிர்ணய உரிமையுண்டு என்றும், தேசிய இனங்களுக்கு நிர்வாக சுயநிர்ணய உரிமை தான் உண்டு என்றும், தேசிய இனங்களுக்கு பொருளாதார சுய நிர்ணய உரிமை தான் உண்டு என்றும் பல்வேறு வகைப்பட்ட கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன. ஆனால் லெனின் கூறினார் தேசிய இனப்பிரச்சனைக்கு அரசியல் ரீதியான சுய நிர்ணய உரிமை உண்டு. அது பொருளாதாரத்தை உள்ளடக்கியது. அரசியல் ரீதியில் பிரிந்து செல்லும் உரிமையையும் இது கொண்டது. (பிரிந்து செல்லும் உரிமை வாக்கெடுப்பு மூலமாக பிரிந்து செல்லுதல்)

இவ் அடிப்படையில் பல் தேசிய இனங்கள் ரஸ்சியாவில் ஒன்றுபட்டு போல்ஸ்விக் கட்சியின் தலைமையில் ஜார் மன்னனுக்கு எதிராக போரிட்டு ஒர் புதிய தேசத்தை 1917 ஒக்டோபர் மாதம் படைத்தனர். வெற்றிக்குப் பின் பிலோரைசியன், உக்கிரேனியன் பின்லாந்து ஆகிய மூன்று தேசிய இனங்களும் தாம் பிரிந்து செல்லப் போவதாகக் கூறினர். லெனின் கூறினார் "நீங்கள் பிரிந்து தான் செல்ல வேண்டுமென்றால் அதை நாம் அனுமதிக்கிறோம் ஆனால், நான் ஆலோசனை கூறுகிறேன் நீங்கள் பிரிந்து போய் வாழ்வதை விட சேர்ந்திருந்து வாழ்வது தான் உங்கள் பொருளாதார அபிவிருத்திக்கும் சமூகக் கலாச்சார மேம்பாட்டுக்கும் உகந்தது.



படிப்பகம்

கடந்த கால வரலாற்று அனுபவம் காரணமாக அப்பயத்தின் அடிப்படையில் பிரிந்து போக விரும்புகிறீர்கள். உங்கள் பயம் தெளிந்ததும் வாருங்கள். உங்களுக்காக சோவியத் சோசலிச அரசமைப்பானது எப்போதும் கதவுகளை திறந்து வைத்திருக்கும்'' என்றார்.

பிலோரைசியன், உக்ரேனியன், பின்லாந்து ஆகிய மூன்று தேசிய இனங்களும் பிரிந்து சென்றன.

சோவியத்யூனியனில் பல தேசிய இனங்களையும் இணைத்து ''ரிப்பப்லிக்கன்'' அமைப்பு எனப்படுகிற (குடியரசு ஆட்சி முறை) ஆட்சிமுறை அமைக்கப்பட்டது. பிரதானமான தேசிய இனங்களை அடிப்படையாகக் கொண்டு பல தேசிய இனங்களையும் உள்ளடக்கி குடியரசு ஆட்சிமுறையை தனித் தனி தேசிய இனங்களுக்கு அமைத்துக் கொடுத்துள்ளார். இவ் அனுபவத்தை கண்ட உக்ரேனியன், பிலோரைசியன். இனங்கள் மீண்டும் தாம் இணைந்து கொள்ள முன்வந்தன. 1917 ஆண்டு பிரிந்து சென்ற இரு தேசிய இனங்கள் லெனினது காலகட்டத்திலேயே 1922-ம் ஆண்டு திரும்பவும் வந்து சோவியத்துடன் இணைந்து கொண்டன.

தாம் தனித்திருந்து பொருளாதார மேம்பாடு அடையாத நிலையில் சோவியத் யூனியனின் பொருளாதார மேம்பாட்டைக் கண்டு, இணைவதன் மூலம் தங்களின் நலன்கள் பெரிதாக இருக்குமென்ற அனுபவத்தைக் கண்ட பின்னரும், தாம் ஒடுக்கப்பட மாட்டோம் என்ற நம்பிக்கையை பெற்றுக்கொண்ட பின்னரும் தான், இவை இணைந்துகொண்டன.

சோவியத் யூனியனில் 15 'ரிப்பப்ளிக்' உண்டு (15 குடியரசுகள்) இதில் 4 வகையான அமைப்புகள் உள்ளன.

தேசிய இனத்தின் தன்மைக்கேற்ப இவை மாறுபடும். ஒரு ரிப்பப்ளிக்கை எடுத்துக்கொண்டால் ஒரு பெரிய தேசிய இனத்தின் பேரால் அதனை மையமாகக்கொண்டு ''ரிப்பப்ளிக்'' அமைக்கப்படும். அவற்றுக்குள் பல தேசிய இனங்கள் இருக்கலாம். பெரிய தேசிய இனமும், ஏனைய தேசிய இனமும் சேர்ந்து இந்த குடியரசு அமைகிறது. இப்பெரிய தேசிய இனம் மற்றைய தேசிய இனத்தை ஒடுக்க முடியாதவகையில் அவர்களுக்கு தனித்தனியாக ஒட்டோனமஸ் ரிப்பப்ளிக் அமைப்பு அமைக்கப்படுகிறது. முதலாவது ''ரிப்பப்ளிக்கை'', ''யூனியன் ரிப்பப்ளிக்'' என்பர். (இது 15) ஒவ்வொரு யூனியன் ரிப்பப்ளிக்குள்ளும் ''ஒட்டோனமஸ் ரிப்பப்ளிக்'' உள்ளது. இது ஒரு தேசிய இனத்தை மட்டும் பூரணமாகக் கொண்டுள்ளது. இதைவிட பூரணமாக தேசிய இனமாக இல்லாது வளர்ந்து கொண்டு வருகின்ற இனத்திற்கு ''ரிப்பப்ளிக் ஒட்டோனமஸ் ஒப்பிலாஸ்'' (ரஸ்சியமொழி)உம், இதற்கு கீழாகவும் சிறுபான்மை இனமாய் காணப்படுகிறவர்களுக்கு ''ஒட்டோனமஸ் ரிப்பப்ளிக் ஒப்றக்''உம் அமைக்கப்பட்டுள்ளது.

www.padippakam.com

ஒவ்வொரு யூனியன் றிப்பப்ளிக்குக்கும் ஒவ்வொரு அரசியல் திட்டம் இருக்கும். இவர்கள் இதற்குள் சுதந்திரமாகச் செயற்படுவார்கள். இதைவிட இதற்குள் உள்ள ''ஒட்டோனமஸ் றிப்பப்பிளிக்கும்'', ''யூனியன் றிப்பப்பிளிக்குக்கு'' உட்பட்ட அரசியல் திட்டம் இருக்கும். இதற்குக் கீழே ''ஒட்டோனமஸ் றிப்பப்பிளிக் ஒப்லாஸ்''இன் அரசியல்திட்டம் இருக்கும். இது பூரணமான பொருளாதார சுயாதிபத்தியத்தைக் கொண்டிருக்க மாட்டாது. இதில் இவர்களுக்கு குறைந்த அதிகாரமே காணப்படும். ஆனால் தமது தேசிய இனம் சம்பந்தமாக, மொழி, கலாச்சாரம், தமது நிர்வாகம் சம்பந்தமாக சகல சுயாதிபத்தியமும் இவர்களுக்கு உண்டு. ஒட்டோனமஸ் ஒப்பிலாஸ் பொருளாதாரம் சம்பந்தமாக எவ்வித தீர்மானங்களையும் எடுக்க முடியாது. ஒவ்வொரு யூனியன், ஒட்டோனமஸ் றிப்பப்பிளிக்குகளும் தனது சுயமொழியிலேயே நிர்வாகம் நடாத்தும் உரிமை உடையவை. தொடர்பு மொழியாக மட்டும் ரஸ்சிய மொழியிருக்கும்.

பெருஞ் சாலைகள், பாரிய தொழிற்சாலைகள் போடுவது தொடர்பாக மட்டும் மத்திய அரசாங்கத்தின் தொடர்பு ஏற்படும். அப்படித் தொடர்பு ஏற்பட்டாலும் கூட மத்திய அரசாங்கம் ஒரு பாரிய தொழிற்சாலையை ஒரு யூனியன் றிப்பப்பிளிக்குக்கு போட்டாலும் அதற்குள் வேலை வழங்கப்படும் நபர்கள் நிர்வகிக்கப்படும் நபர்கள் முழுப் பேருமே யூனியன் றிப்பப்பிளிக்கின் தீர்மானத்துக்கு மீறியதாக இருக்க முடியாது.

சோவியத் யூனியனில் இரு சபைகள் உள்ளன.

1. தேசிய இனங்களின் சபை. (Chamber of Nationalities)
2. சோவியத்துக்களின் சபை. (Chamber of soviets)

தேசிய இனங்களின் சபைக்கு பிரதிநிதிகளை தெரிவுசெய்யும்போது எல்லா றிப்பப்பிளிக்கிலும் இருந்தும் தலா 25 பேர் தெரிவு செய்யப்படுவர். அந்த றிப்பப்பிளிக்கில் உள்ள ஒட்டோனமஸ் றிப்பப்பிளிக்கில் 11 பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவர். அதற்குள் காணப்படும் ஒப்லாஸ்சுக்கு 5 பிரதிநிதிகளும். ஒப்ரக்குக்கு 1 பிரதிநிதியும் தெரிவு செய்யப்படுவர்.

தேசிய இனங்களில் சபை தெரியப்பட்டு இருக்குமாயின் அதில் சகல இனங்களுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கும்.

இரு சபைகளுக்கும் சம அதிகாரம் உள்ளது. ஒரு சபையால் நிராகரிக்கப்பட்ட தீர்மானம், மறு சபையால் சட்டமாக நிறைவேற்றப்பட முடியாது.

15 றிப்பப்பிளிக்கில் இருந்தும் ஒவ்வொரு பிரதிநிதி ''பிரசீடியம் ஒவ் சோவியத் சுப்ரீ' முக்குச் செல்வார். இதுவே நிர்வாகத்தின் சபையாகும். இதில் 32 பிரதிநிதிகள் இருப்பர். 15 றிப்பப்ளிக்குகளின் தலைவர்களும் இதற்குச் செல்வர். இவர்களை


படிப்பகம்

www.padippakam.com

விடவும் கம்.கட்சியில் இருந்து 17 பேர் செல்வர். இந்த 32 பேருமே நாட்டின் நிர்வாகத்தை நடத்துவர். இவ் 32 பேரில் ஒருவராக கம்.கட்சி பொதுச் செயலாளர் இருப்பார்.

சோவியத்யூனியனில் பூரணமான சுயாதிபத்தியம் கொண்ட சமஷ்டி ஆட்சியின் கீழ் தேசிய இனப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. ★

நன்றி - பிருதுவி

....∽∽∽∽∽....

வீட்டுக்குச் செல்வதற்காக புகையிரதத்தில் ஏறியிருந்த போது அருகில் யாராவது நமது ஆட்கள் தெரிகிறார்களா என்று கண்களை ஓட விட்டேன். தூரத்தில் ஒரு இருக்கையில் நமது இளைஞர் ஒருவர் தலையை தொங்கப்போட்டுக் கொண்டிருந்தார் அருகில் சென்று மெதுவாகப் பேச்சுக் கொடுத்தேன் தம்பி என்ன கடுமையாக யோசித்துக் கொண்டிருக்கிறீர்? ஒன்றுமில்லையண்ணை போன கிழமை கனடாவுக்கு வெளிக்கிட்டு ஆறாயிரம் மார்க் போச்சுது அதுதான் யோசிக்கிறன். ஏன் தம்பி கனடா போறீர் இங்கை உமது அகதிவழக்கு நிராகரிச்சுப் போட்டாங்களோ. இல்லை அண்ணை எனக்கு கோட் கிடைச்சிருக்கு ஆனால் இங்கை எல்லோரையும் திருப்பி அனுப்பப் போறாங்களாம். கனடாவுக்கு போனால் நிரந்தரமாய் இருக்கலாம். அதுக்கென்ன தம்பி ஊரிலே உண்மையான சமாதானமும் அமைதியும் ஏற்பட்டால் போறது தானே. அங்கேயும் மனுசர் போகேலாது ஊரில் ஒரே கொலையும் கொள்ளையும் நடக்குது இயக்கங்கள் வெளிநாட்டில் இருந்து போறவையிட்டை காசு பறிக்கினம். வேற இயக்கத்து ஆள் என்றால் கொலை செய்யினம் மொத்தத்தில் அராஜகம் தலைவிரித்தாடுது தம்பி சொல்லுறன் என்டு குறை நினைக்காதேயும் நீங்கள் இங்கே இருக்கும் போது ஒன்றும் விளங்காமல் கண்ணை மூடிக் கொண்டு காசை அள்ளிக் கொடுத்து அராஜகத்தை வளர்த்துப் போட்டு இப்ப கனடா தப்பி ஓடுறியள் நீங்கள் வளர்த்து விட்ட அராஜகத்தில் அமிழ்ந்து போயிருக்கும் அந்த அப்பாவிப் பொதுமக்கள் எங்கே ஓடுறது? நான் சொன்னதை ஒருமுறை யோசிச்சுப்பாரும் ஆனால் வெளியில் சொல்லாதேயும் பிறகு நான் ஊருக்குப் போனால் என்ரை தலை உடம்பில் தங்காது நமக்கேன் வீண் வம்பு நான் வாறன் தம்பி. ஒரு உண்மையை சொன்ன திருப்தியுடன் அடுத்த பெட்டிக்கு நடையை கட்டினேன்.

28 உ —— [illegible]

படிப்பகம்

www.padippakam.com

# ஜேர்மனியில் ஆளுங்கட்சி படுதோல்வி

ஜேர்மனியிலுள்ள SCHLESWIG HOLSTEIN மாநிலத்தில் 8.5.88 மாநிலத்துக்கான தேர்தல் நடைபெற்றது. ஜேர்மனியில் பாராளுமன்றத் தேர்தலும், மாநிலங்களுக்கான தேர்தலும் 4 வருடங்களுக்கு ஒரு முறையே நடைபெறும். நடந்து முடிந்துள்ள HOLSTEIN மாநிலத் தேர்தலில் சோசலிஸ்ட் கட்சியான S.P.D அமோக வெற்றியீட்டியுள்ளது.

1983ல் நடைபெற்ற மாநிலத் தேர்தலில் CDU கட்சியே ஆட்சியிலிருந்தது. நான்கு வருடங்கள் முடிந்த பின்பு 13.9.1987 தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தல் தினத்திற்கு முதல் தினமான 12.9.1987ல் HOLSTEIN மாநில பத்திரிகைகள் யாவும் பரபரப்பான செய்தி ஒன்றை வெளியிட்டன. CDU கட்சியை சேர்ந்த PFEIFFER என்பவரே இத்திடுக்கிடும் செய்தியை பத்திரிகையாளர்களுக்கு தெரி

இருந்தவராவார். இவர் CDU கட்சியின் பிரச்சாரப் பிரிவுக்கு பொறுப்பாக இருந்தார். தன்னிடம் CDU கட்சியின் HOLSTEIN மாநிலத் தலைவர் BARSCHEL எதிர்கட்சி தலைவரான SPDயை சேர்ந்த ENGHOLM என்பவரை உளவுபார்க்கும்படியும் அவர் நிறைந்த அறைக்கின்றான்னா செய்கிறார் என்பதை சென்று நோட்டம் விடுமாறும், இவர் கட்சிப் பணத்தை மோசடி செய்துள்ளார் எனப் பொய்ப் பிரச்சாரத்தை கட்டவிழ்த்து விடும்படியும் இவரின் தொலைபேசியின் பேச்சுக்களை ஒட்டுக் கேட்குமாறும் கட்டளையிட்டதாக பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்தார். PFEIFFER தான் CDU கட்சியிலிருந்து விலகிவிட்டதாயும் இப்போது எந்தக் கட்சியிலும் இல்லை எனவும் தெரிவித்தார். இப்பத்திரிகைச் செய்திகள் மக்கள் மத்தியில் வெளி



படிப்பகம்

www.padippakam.com

பரபரப்பை ஏற்படுத்தின.

இச்செய்தி வெளியான அன்றிரவு (12.9.87) CDUவின் HOLSTEINர் மாநிலத்தலைவர் BARSCHEL தேர்தல் தொலைக்காட்சியில் இது பற்றி விளக்கமளித்தார். PFEIFFER கூறியிருப்பது பொய் எனவும் தான் அப்படி எதுவும் செய்யும்படி அவரை தான் கட்டளையிடவோ அன்றி தூண்டவோ இல்லையென்றும் தனது உண்மையான வார்த்தைகளை மக்கள் நம்ப வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். SPDகட்சியும் இது தவறான செய்தி என தெரிவித்தது. 13.9.87ல் தேர்தல் நடைபெற்றது.

தேர்தல் விபரம்.

CDU- 33. ஆசனங்கள் முன்னைவிட 6ஆசனங்களை இழந்தது.

SPD- 36 ஆசனங்கள். முன்னை விட இரு ஆசனங்கள் கூடப்பெற்றது.

FDP- 4. ஆசனங்கள்.

GRUEEN- 3.9%மான வாக்குகள் கிடைத்தன. ஆகக் குறைந்தது 5%மான வாக்குகள் கிடைத்தால் தான் எந்தக்கட்சியும் ஆசனங்களை பெறமுடியும்.

S.S.W- 1 ஆசனம்.
இக்கட்சி DENISH மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி இக்கட்சி மட்டும் 5% குறைவாக வாக்குகள் கிடைத்தாலும் ஆசனத்தைப்பெறும்.

இம்மாநிலத்தில் வாழும் DENISH மொழிபேசும் மக்களுக்கு மாநில அவையில் பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே SSWக்கு சலுகை வழங்கப்பட்டுள்ளது.

CDU கட்சியும் FDP கட்சியும் கூட்டுச்சேர்ந்து 37ஆசனங்களுடன் ஆட்சியமைத்தன. SPD 36 ஆசனங்களுடன் பலமான எதிர்கட்சியாக இருந்தது. மாநில முதல்வராக CDU வின் சார்பில் BARSHEL பொறுப்பேற்றார்.

PFEIFFER இனது BARSHEL மீதான குற்றச்சாட்டுக்களை விசாரணை நடாத்துவதற்கு விசார



படிப்பகம்

www.padippakam.com

னைக் கமிஷன் இந்நாச்சாட்டுகள் சம்பந்தப்பட்ட அமிருத்து சாட்சிகளையும் விசாரணை செய்தது.

விசாரணையின் முடிவில் BARSHEL மீதான இந்நாச்சாட்டுகள்யாவும் உண்மையென நிரூபிக்கப்பட்டது.

இவ்விசாரணை முடிவு தெரிவிக்கப்பட்ட அவ்வாரத்தில் அதாவது 87க் கடைசிப் பகுதியில் BARSCHEL சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு SWITZELAND சென்றார். SWISSல் உள்ள GENF நகரத்திலுள்ள ஆடம்பரக் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தார். தங்கியிருந்த வேளையில் ஒரு நாள் காலை 10 மணிக்கு பத்திரிகையாளர்களை அழைத்திருந்தார். பத்திரிகையாளர்கள் அங்கு சென்றபோது அவர் இருந்த அறையின் கதவு திறந்து கிடக்க காணப்பட்டது. பத்திரிகையாளர்கள் உள்ளே சென்று பார்த்தபோது BARSHEL போட்டிருந்த உடுப்புக்களுடனேயே குளியல் தொட்டிக்குள் இறந்து கிடக்கக் காணப்பட்டார். இச்செய்தி ஜேர்மனியெங்கும் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது. அவர் கொலை செய்யப்பட்டாரா அல்லது தற்கொலை செய்து கொண்டாரா என்பது புதிராகவேயுள்ளது.

இந் நிகழ்வின் பின்பு SPDகட்சி புதிய தேர்தலை வைக்கும் படி வற்புறுத்தியது. இதன் அடிப்படையில் மீண்டும் 8.5.88ல் தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தல் முடிவுகள் அனைத்து ஜேர்மன் மக்களாலும் அரசியல் அவதானிகளாலும் உன்னிப்பாக கவனிக்கப்பட்டவையொன்றாகும். இத்தேர்தலில் சோசலிஸ்ட் கட்சியான SPD கட்சி அமோக வெற்றியீட்டியது. இது SPDயின் வரலாற்றிலேயே குறிப்பிடத்தக்க வெற்றிகளில் இதுவொன்றாக அமைந்தது. CDU கட்சியின் 40 வருட கோட்டையாக இருந்த இடத்தை SPD தனதாக்கிக்கொண்டது.

இத்தேர்தலில் CDU வுக்கு ஏற்பட்ட தோல்விக்கு BARS-CHEL இன் மக்களை ஏமாற்றிய தன்மை ஒரு காரணமாயினும் எதிர் காலத்தில் CDU விற்கான ஸ்திரத்தன்மையை இத் தேர்தல் ஈடாட வைத்துள்ளதாகவே தெரிகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# தேர்தல் விபரம்.

மொத்த வாக்காளர் - 2042226.
வாக்களித்தவர்கள் - 1580613, 77.4%.
நிராகரிக்கப்பட்டவை- 14364.

| | | 88ம் ஆண்டு. | 87ம் ஆண்டு |
|---|---|---|---|
| SPD - | 857688. | 54.8% | 45.2% |
| CDU - | 521014 | 33.3% | 42.6% |
| FDP | 69588 | 4.4% | 5.2% |
| GRUNE - | 44886 | 2.9% | 3.9% |
| S.S.W. - | 26646 | 1.7% | 1.5% |
| N.D.P | 19151 | 1.2% | |

N.D.P கட்சி கிட்லரின் கொள்கைகளை மீளநிறுத்த பாடுபடும் கட்சியாகும். ஜேர்மன் ஜேர்மனியருக்கே வெளிநாட்டினர் வெளியேற வேண்டும் என்ற கோஷங்களை எழுப்பி வருகிறார்கள். இக் கட்சி ஆரம்பிக்கப் பட்ட போது 20% மான ஆதரவு இருந்தது. பின்பு குறைந்து வந்து இல்லாமலே போனது. இப்போது மீண்டும் துளிர்த்துள்ளது.

அண்மையில் பிரான்சில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் LEPEN என்பவரின் கட்சியும் போட்டியிட்டது. இவரது கட்சியும் வெளிநாட்டினருக்கு எதிரான தீவிரக் கொள்கைகளை கொண்ட கட்சியாகும். இக்கட்சிக்கு 14% மான வாக்குகள் கிடைத்துள்ளன.

ஜேர்மனியில் N.D.Pயின் வளர்ச்சி பிரான்சில் LEPEN. வளர்ச்சி ஐரோப்பாவில் வெளிநாட்டினரின் எதிர்காலத்திற்கு பெரும் அச்சுறுத்தலாகும்.

தகவல்:- சின்னவன்.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஐக்கியப்படுவோம் போராடுவோம் அமைதி காண்போம்

படிப்பகம்